ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1932/56 - 2015 සැප්තැම්බර් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2015.09.17
*1932/56 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

தென் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்

தென் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினர் பதவி, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டமை காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;

அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர்குறிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. காரியவசம் பெதன்கொடகே சிசிர குமாரரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

தேர்தல்கள் ஆணையாளரான வடுகே வருணசிறி மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி திரு. காரியவசம் பெதன்கொடகே சிசிர குமாரரத்ன என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான காலி நிர்வாக மாவட்டத்தில் இருந்து மேற்குறித்த மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2015, செத்தெம்பர் 16.

10-166/1

## *1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்*

தென் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்

*தென் மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினர் பதவி, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டமை காரணமாக, அம்மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின் கீழ் தென் மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர்குறிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. கங்கானம்கே சிரிபத்தன சந்தன கிரிஷாந்த என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*தேர்தல்கள் ஆணையாளரான வடுகே வருணசிறி மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி திரு. கங்கானம்கே சிரிபத்தன சந்தன கிரிஷாந்த என்பவர், அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான மாத்தறை நிர்வாக மாவட்டத்தில் இருந்து மேற்குறித்த மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2015, செத்தெம்பர் 16.*

*10-166/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.